அரும்பாக்கம்

# பிரைம் இந்தியன் மருத்துவமனையில் பித்தப்பை கற்களை அகற்ற நவீன சிகிச்சை

சென்னை ஆக. 15

சென்னை அரும்பாக்கத்தில் உள்ள பிரைம் இந்தியன் மருத்துவமனையில் வயிறு தொடர்பான பல்வேறு நோய்களுக்கு நவீன முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



டாக்டர். கண்ணன்

இது குறித்து பிரைம் இந்தியன் மருத்துவ மனையின் கல்லீரல், இரைப்பை, குடல் மற்றும் உடல் பருமன் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். ஆர். கண்ணன் கூறுகையில், நாம் உண்ணும் உணவில் உள்ள கொழுப்பு சத்து செரிமானம் அடைய பித்தநீர் மிகவும் அவசியம்.

இந்த பித்தப்பை சரியாக வேலை செய்யாத போது பித்தப்பையில் கொலஸ்டிரால் அதிக மாகி, அது படிவங்க ளாக மாறி கற்களை உருவாக்குகின்றன.




பெண்களில் அடிக்கடி கருத்தடை மாத்திரை உபயோகிப்ப வர்கள், நிறைய குழந்தை பெற்ற வர்கள், குழந்தை பேறுக்கு ஹார்மோன் சிகிச்சை எடுப்பவர்கள், கர்ப்பக் காலங்களில் ஹார்மோன்கள் அதிகமாவதாலும் பித்தப்பையில் அதிக அளவு கொலஸ்டிரால் இருப்பதாலும், பித்தப்பை சரிவர சுருங்கி விரியாத தாலும் பித்தக்கற்கள் உருவா கின்றன. 60 வயதை கடந்தவர்கள், மரபு வழி குறைபாடுகளாலும் பித்தப்பையில் கற்கள் ஒரு சிலருக்கு உண்டாகும்.

பித்த நீரில் கற்கள் இருப்பதை நாம் அல்டரா சவுண்டு ஸ்கேன் மூலமாக சுமார் 90 முதல் 95 சதவீதம் வரை கண்டுபிடிக்கலாம். இதுவே சிறந்த பரிசோதனை முறை ஆகும்.

பித்தப்பை சரிவர வேலை செய்கிறதா இல்லையா என்பதை ஹிடா ஸ்கேன் மூலமாக கண்டு பிடிக்கலாம்.

பித்தப்பை கற்களுக்கு அறுவை சிகிச்சையே சிறந்த முறையாகும். இதனை லேப்ரோஸ் கோபி முறையில் சிறு துளைகள் மூலம் கருவியை வயிற்றுக்குள் செலுத்தி பித்தப்பையை கற்களுடன் அகற்றலாம். இந்த முறையில் ரத்த இழப்பு இருக்காது. வலி இருக்காது. தழும்பு மிகச்சிறியது. மருத்துவமனையில் ஓரிரண்டு நாட்கள் இருந்தால் மட்டும் போதும். பித்தப்பை கற்களை கரைக்க உர்சோடியல் மற்றும் செனோடியல் போன்ற பித்த அமிலங்கள் பயன்படுத்தப்படுகிறது.

உடல் பருமனாக உள்ள வர்கள், இளம் வயதிலேயே பித்தப்பையில் கற்கள் உள்ளவர்கள், ரத்த கோளாறு களால் ஏற்படும் கற்கள் உள்ளவர்கள், நீண்ட நாட்களாக சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு தேவைப்பட்டால் பித்தப்பையில் உள்ள கற்களை அகற்ற வேண்டும்.

மேலும் பித்தப்பையில் கால்சியம் படிதல், பித்தப்பையில் கொலஸ்ட்டிரால் அதிக அளவு படிதல் உள்ளவர்கள் மற்றும் பித்தப்பையில் கட்டி உள்ள வர்களுக்கு பித்தப்பையை அகற்றுவது மிக மிக முக்கியம்.

பித்தப்பையை அகற்றிய பின்பும் நாம் சாதாரணமாக எல்லா வகை உணவையும் உண்ண முடியும். மேலும் அழற்சியினால் ஏற்பட்ட வலி உடனடியாக போய்வி டும். மேலும், செரிமானக் குறைபாடு, குமட்டல் மற்றும் உப்புசம் போன்றவை சில மாதங்களில் சரியாகும் என்றார்.

---

விபத்தில் உயிரிழந்த

## விஜய் மக்கள் இயக்க நிர்வாகி கண்கள் தானம்

சென்னை ஆக.15–

நடிகர் விஜய் அரசியலில் அடியெடுத்து வைக்கும் முகமாக விஜய் மக்கள் இயக்கத்தை தொடங்கி அதன் மூலம் மக்கள் நல பணிகளில் அவரது ரசிகர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பாக கடந்த ஆண்டு டிசம்பர் 21–ந்தேதி தளபதி விஜய் விழியகம் செயலி தொடங்கப்பட்டது. சுமார் 7042 நபர்கள் இது நாள்வரை இந்த செயலி மூலம் தன் விருப்பத்தோடு கண்தானம் செய்ய பதிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 12–ந்தேதி செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூர் கிளை விஜய் மக்கள் இயக்க தலைவர் கரண் விபத்து மூலம் உயி ரிழந்தார்.

கரண் விஜய் விழியகம் செயலியில் கண் தானத்துக்கு பதிவுசெய்து வைத்திருந்தார். அதன் அடிப்படையில் உயிரிழந்த கரணின் இரு கண்களும் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அவரது குடும்பத்தார்மற்றும் அவரது தம்பியும், மாமண்டூர் தளபதி விஜய் மக்கள் இயக்க கிளை உறுப்பினருமான மனோஜ் அனுமதியோடு தானமாக வழங்கப்பட்டது.

தளபதி விஜய் விழியகம் செயலி மூலம் கண்தானம் வழங்கிய முதல் நபர் கரண் என்பது குறிப்பிடத்தக்கது.